முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.
முன்னிலை - திரு.எஸ்.விஜய் அழகிரி, பி.காம்.,பி.எல்.,
முதல் கூடுதல் சார்பு நீதிபதி,
2024 ம் வருடம் அக்டோபர் மாதம் 22 ம் நாள் செவ்வாய்கிழமை
(திருவள்ளுவராண்டு 2055 – ஸ்ரீ குரோதி வருடம் - ஐப்பசி திங்கள் 05 ம் நாள்)

<u>நிறைவேற்று இடைநிலை மனு எண்.4/2024</u>
<u>நிறைவேற்று இடைநிலை மனு எண்.2/2023</u>
<u>நிறைவேற்று இடைநிலை மனு எண்.1/2022</u>
<u>நிறைவேற்று மனு எண்.155/2006</u>

ஈரோடு ஸ்பின்னிங் மில்ஸ் பிரைவேட் லிமிடெட் தற்போது
M/s பிளாட்டினம் டிரேட் சென்டர் பிரைவேட் லிமிடெட் அதற்காக
அதன் நிர்வாக இயக்குநர் S.P.தாமோதரன்
2. S.P. தாமோதரன்
3. D.சிவகாமி ..மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள் 1, 2 & 4

// எதிர் //

1. A.B.ஜெகதீசன்
2. S.P.சிவானந்தன் ..எதிர்மனுதாரர்கள்/ வாதி/D.Hr.

09.01.2024 ம் தேதியிட்ட இம்மனு உ.வி.மு.ச. கட்டளை 7, விதி 14(3) மற்றும் பிரிவு 151 ன் படி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டு, இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து, மேற்படி ஆவணங்களை மனுதாரர்கள் தரப்பு ஆவணங்களாக ஏற்றுக் கொள்ளக் கோரப்பட்டுள்ளது.

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 25.09.2024 ம் தேதி இறுதியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, மனுதாரர்கள் தரப்பில் திரு.C.தங்கவேல், வழக்கறிஞர் அவர்களும், 1 ம் எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜரின்மையால் அவரை பொறுத்து ஒருதலைபட்சமாக உத்தரவிடப்பட்டும், 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் திரு.T.புவனேஸ்வர், வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து, வழக்கு கோப்பைப் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>உத்தரவு</u>

மனுதாரர்கள்/1, 2, 4 எதிர்மனுதாரர்களால் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட

காலதாமதத்தை மன்னித்து மேற்படி ஆவணங்களை மனுதாரர்கள் தரப்பு ஆவணங்களாக ஏற்றுக் கொள்ளக் கோரி உ.வி.மு.ச. கட்டளை 7, விதி 14(3) மற்றும் பிரிவு 151 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனு உரையின் சுருக்கம்:

2ம் மனுதாரர் 1வது மனுதாரர் கம்பெனியின் நிர்வாக இயக்குநர் என்றும், அவர் இந்த மனுவை தனக்காகவும், மற்ற மனுதாரர்களுக்காவும் தாக்கல் செய்து இருப்பதாகவும், 1வது எதிர்மனுதாரர் இந்த மனுதாரர்கள் மீதும், 2வது எதிர்மனுதாரர் மீதும் தீர்ப்பாணை பெற்று இருப்பதாக கூறி நிறைவேற்று மனு (EP for Arrest) தாக்கல் செய்து இருப்பதாகவும், அதன் பின்பு 1 வது எதிர்மனுதாரர், 2 வது எதிர்மனுதாரருக்கு எதிராக Not pressed செய்து கொண்டதாகவும், 2 வது எதிர்மனுதாரர் 1 வது மனுதாரர் நிறுவனத்தில் Joint Managing Director ஆக நியமிக்கப்பட்டுள்ளார் என்றும், தீர்ப்பாணை தொகையில் 50% விகிதாச்சார தொகையைச் செலுத்த அவர் கடமைப்பட்டு உள்ளார் என்றும், அதன் பிறகு 1 வது எதிர்மனுதாரர் இந்த மனுதாரர்களின் 1 வது மனுதாரின் சொத்தை ஜப்தி செய்ய ஏலம் விடுவதற்கு திருத்தம் செய்யக் கோரிய மனு EA.01/2022ல் இந்த மனுதாரர்களுக்கு அறிவிப்பு எதுவும் அனுப்பப்படவில்லை என்றும், 2வது எதிர்மனுதாரர் 1வது எதிர்மனுதாரருடன் கூட்டு சேர்ந்து 1வது எதிர்மனுதாரர் பொய்யாகத் தீர்ப்பாணை பெற்று இருப்பதாகவும் EA.01/2022ல் இந்த எதிர்மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்யக் கோரி இந்த மனுதாரர்கள் தனியாக EA.02/2023 தாக்கல் செய்து நிலுவையில் இருப்பதாகவும், அந்த மனுவில் இந்த மனுதாரர்கள் தரப்பில் இந்த மனுதாரர் வ.சா.1 ஆக முதல்விசாரணை செய்யப்பட்டு இந்த மனுதாரர் தரப்பில் இந்த மனுவில் கண்டுள்ள ஆவணங்களை அப்பொழுதே தாக்கல் செய்யாமல் காலம் கடந்து தற்போது தாக்கல் செய்யவதை மன்னிக்கக் கோரி இந்த மனு தாக்கல் செய்திருப்பதாக கூறப்பட்டுள்ளது.

3. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் உரையின் சுருக்கம்:

மனுவானது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கதக்கது அல்ல. மனுவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்து தவறானது. இந்த மனுவில் சொல்லியுள்ள ஆவணங்கள் காலதாமதமாகத் தாக்கல் செய்ததற்கு எவ்வித விளக்கமும் கூறவில்லை. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் CRP.No.4142/09 படி EA.01/2022 தாக்கல் செய்து இந்நீதிமன்றத்தால் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுப்படி தான் தீர்ப்பாணை பெற்றவர் EA.01/2022னை தாக்கல் செய்து 1வது மனுதாரர் நிறுவனத்தின் சொத்துக்களை ஏலத்தில் விட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், அதனால் இந்த எதிர்மனுதாரர் சொத்துக்களை ஏல நடவடிக்கைக்கு உட்படுத்த முடியாது என்றும், இந்த மனுவிற்கு எவ்வித

நல்ல எண்ணமும் இல்லாததால் இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று கூறப்பபட்டுள்ளது.

4. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா என்பதே இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

5. பிரச்சினைக்குத் தீர்வு:

இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது, மனுதாரர் தரப்பில், 2ம் மனுதாரர் 1 வது மனுதாரர் கம்பெனியின் நிர்வாக இயக்குநர் என்றும், அவர் இந்த மனுவை தனக்காகவும், மற்ற மனுதாரர்களுக்காவும் தாக்கல் செய்து இருப்பதாகவும், 1 வது எதிர்மனுதாரர் இந்த மனுதாரர்கள் மீதும், 2 வது எதிர்மனுதாரர் மீதும் தீர்ப்பாணை பெற்று இருப்பதாக கூறி நிறைவேற்று மனு (EP for Arrest) தாக்கல் செய்து இருப்பதாகவும், அதன் பின்பு 1 வது எதிர்மனுதாரர் 2 வது எதிர்மனுதாரருக்கு எதிராக Not pressed செய்து கொண்டதாகவும், 2 வது எதிர்மனுதாரர் 1 வது மனுதாரர் நிறுவனத்தில் Joint Managing Director ஆக நியமிக்கப்பட்டுள்ளார் என்றும், அதனால் அவர் தீர்ப்பாணை தொகையில் 50% விகிதாச்சார தொகையைச் செலுத்த கடமைப்பட்டு உள்ளார் என்றும், அதன் பிறகு 1 வது எதிர்மனுதாரர் இந்த மனுதாரர்களின் 1 வது மனுதாரின் சொத்தை ஜப்தி செய்து ஏலம் விடுவதற்கு திருத்தம் செய்யக் கோரிய மனு EA.01/2022 ல் இந்த மனுதாரர்களுக்கு அறிவிப்பு எதுவும் அனுப்பப்படவில்லை என்றும், 2 வது எதிர்மனுதாரர் 1 வது எதிர்மனுதாரருடன் கூட்டு சேர்ந்து 1 வது எதிர்மனுதாரர் பொய்யாகத் தீர்ப்பாணை பெற்று இருப்பதாகவும் EA.01/2022 ல் இந்த மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்யக் கோரி இந்த மனுதாரர்கள் தனியாக EA.02/2023 தாக்கல் செய்து நிலுவையில் இருப்பதாகவும், அந்த மனுவில் இந்த மனுதாரர்கள் தரப்பில் இந்த மனுதாரர் வ.சா.1 ஆக முதல்விசாரணை செய்யப்பட்டு இந்த மனுதாரர் தரப்பில் இந்த மனுவில் கண்டுள்ள ஆவணங்களை அப்பொழுதே தாக்கல் செய்யாமல் தற்போது காலதாமதமாக தாக்கல் செய்வதை மன்னிக்கக் கோரி இந்த மனு தாக்கல் செய்திருப்பதாக வாதிடப்பட்டது.

5.2 2 வது எதிர்மனுதாரர் தரப்பில், இந்த மனுவில் சொல்லியுள்ள ஆவணங்கள் காலதாமதமாகத் தாக்கல் செய்ததற்கு எவ்வித விளக்கமும் கூறவில்லை என்றும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் CRP.No.4142/09 படி EA.01/2022 தாக்கல் செய்து இந்நீதிமன்றத்தால் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுப்படி தான் தீர்ப்பாணை பெற்றவர் EA.01/2022 னை தாக்கல் செய்து 1 வது மனுதாரர் நிறுவனத்தின் சொத்துக்களை ஏலத்தில் விட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், அதனால் இந்த எதிர்மனுதாரர் சொத்துக்களை ஏல நடவடிக்கைக்கு உட்படுத்த முடியாது என்றும், இந்த மனுவிற்கு எவ்வித நல்ல எண்ணமும் இல்லாததால் இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் வாதிடப்பட்டது.

5.3 மனு ஆவணங்களை பரிசீலனை செய்கையில் மனுதாரர்கள் தரப்பில் EA.02/2023 தாக்கல் செய்து அதில் EA.01/2022(Amendment Petition) இந்த மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்ய கோரி மனு தாக்கல் செய்து அந்த மனுவில் இந்த மனுதாரர் வ.சா.1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் ஆவணங்கள் குறியீடு செய்வதற்கு நிறைவேற்று மனு எண். 02/2023 நிலுவையில் இருந்து வரும் நிலையில் தற்போது வ.சா.1ன் மூலமாகத் தற்போது காலதாமதமாக தாக்கல் செய்யப்படும் ஆவணங்களை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதற்காக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவில் சொல்லப்பட்டிருக்கும் 1 முதல் 3 ஆவணங்களில் மனுதாரர் வசம் உள்ள ஆவணங்கள் ஆகும். அது 1வது மனுதாரர் நிறுவனம் மற்றும் மனுதாரர்கள் 2 வது எதிர்மனுதாரர் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் ஆகும். அந்த ஆவணங்களைப் பொருத்தும், அதன் செல்லும் தன்மைகுறித்து இடைநிலை மனு எண்.02/2023ல் இறுதி தீர்ப்பில் முடிவு செய்து கொள்ளலாமென இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. 4 முதல் 7 வரை மனுவில் சொல்லியுள்ள ஆவணங்கள் எல்லாம் நிறைவேற்று மனுவில் வழக்கு கோப்புடன் உள்ள ஆவணங்கள் ஆகும். அந்த ஆவணங்கள் வழக்கு கோப்புடன் உள்ளதால் அவற்றை மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்யும் பட்சத்தில் பின்னாளில் அந்த ஆவணங்களைத் திரும்பப் பெறும்போது பிரச்சனை ஏற்பட வாய்ப்புள்ளது. அதில் 4வது ஆவணம் 01.09.2006ல் EPயில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு ஆகும். 5வது ஆவணம் 2வது மனுதாரருக்காக வழக்கறிஞர் ஆஜரான வக்காலத்து ஆகும். 6வது ஆவனமானது 2வது மனுதாரருக்காக EA.01/2022ல் வழக்கறிஞர் அறிவிப்பு பெற்று கொண்டதற்கான ஆவணம் ஆகும். 7வது ஆவணம் 03.09.2009ல் பிறப்பிக்கப்பட்ட நிறைவேற்று மனு உத்தரவு ஆகும். நிறைவேற்று மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள், வக்காலத்து மற்றும் மனுவானது மனுதாரர்களுக்கு சுலபமாக நகல் மனுவின் மூலம் கிடைக்க கூடிய ஆவணங்கள் ஆகும். நிறைவேற்று மனுவில் பிறப்பிக்கப்பட்ட அசல் உத்தரவு, வக்காலத்து மற்றும் மனுவை மனுதாரர் தரப்பில் குறியீடு செய்தால் அது பின்னாளில் பிரச்சனை ஏற்பட வாய்ப்பு உள்ளது. 4 முதல் 7 வரையான மனுவில் சொல்லியுள்ள ஆவணங்கள் மனுதாரருக்கு நகல் மனு மூலம் கிடைக்கக்கூடிய ஆவணங்கள் என்பதால் 4 முதல் 7 ஆவணங்கள் மனுவில் கண்டுள்ள ஆவணங்கள். மனுதாரர் நகல் மனு தாக்கல் செய்து அந்த நகல் மனுமூலம் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய அனுமதி வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் முடிவுக்கு வந்து இம்மனுவை அனுமதிக்கலாமெனக் கருதுகிறது.

முடிவாக மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்த இம்மனு மனுவில் கண்டுள்ள 1 முதல் 3 ஆவணங்களை பெற்று கொண்டும் 4 முதல் 7 வரையான ஆவணங்களை மனுதாரர்கள் நகல் மனு தாக்கல் செய்து அதன் மூலம் பெற்று தாக்கல் செய்ய அனுமதி வழங்கி உத்தரவிடப்படுகிறது.

செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2024ம் வருடம் அக்டோபர் மாதம் 22ம் நாள் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

முதல் கூடுதல் சார்பு நீதிபதி,
ஈரோடு.

சாட்சிய சான்றாவணப் பட்டியல்
(இருதரப்பிலும் .. தாக்கல் இல்லை...)

மு.கூ.சா.நீ., ஈரோடு.